இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 17-06-2023

# அமித்ஷாக்கள் அறிக! 4

தமிழ்நாட்டுக்கு ஏராளமான நிதியை வழங்கி விட்டதாக உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இது தொடர்பாக எதி.மு.க. பொருளாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், **“உள்துறை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ள நிதி ஒதுக்கீடுகள், மானியங்கள், ஒன்றிய அரசு மாநில அரசுக்கு கொடுக்க வேண்டிய அரசியல் சட்டக் கடமை. அது பா.ஜ.க. ஆட்சியில் இருப்பதால் வந்தது இல்லை. எந்த அரசு ஒன்றியத்தில் இருந்தாலும் அதைக் கொடுக்காமல் இருக்க முடியாது. அதிலும் குறிப்பாக ஜி.எஸ்.டி. மூலம் தமிழ்நாட்டிலிருந்து அதிக வருவாய் ஒன்றியத்திற்குக் கிடைக்கும்போதுகூட தமிழ்நாட்டை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. அதற்கு பதில், தமிழ்நாட்டில் வசூலித்து உ.பி.யிலும் - பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலும் செலவழிப்பதுதான் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி!”** என்று சுட்டிக்காட்டி உள்ளதுதான் மாபெரும் உண்மையாகும்.

இவர்களது திட்ட ஒதுக்கீடுகள் அனைத்தும் எப்படி இருந்துள்ளது என்பதை பிரதமர் முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

26.2.2022 ஆம் நாள் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில் பிரதமர் முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசும் போது, **“தமிழ்நாடு பலவகைகளில் இந்தியாவின் முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு. ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 6 விழுக்காடு. ஆனால் ஒன்றிய அரசின் வரி வருவாயில் தமிழ்நாட்டுக்கு பகிர்ந்தளிக்கப்படுவது 1.21 விழுக்காடு மட்டுமே. எனவே தமிழ்நாடு போன்ற வளர்ந்த மாநிலங்கள் அளிக்கக் கூடிய பங்குக்கு ஏற்ப நிதி வழங்க வேண்டும்”** என்று கேட்டுக் கொண்டார். அந்தளவுக்கு தரப்படுகிறதா என்பதை உள்துறை அமைச்சர்தான் விளக்க வேண்டும்.

ஒன்றிய வரி வருவாய்க்கு தமிழ்நாடு அளிப்பது 1.6 லட்சம் கோடி ரூபாய். ஆனால் அந்த ஒன்றிய வரி வருவாயிலிருந்து தமிழ்நாட்டிற்கு பகிர்ந்தளிப்பது வெறும் 41 ஆயிரம் கோடி ரூபாய். ஒன்றிய வரிகளில் இருந்து தமிழ்நாட்டிற்கு நிதி ஆணையம் பகிர்ந்தளிப்பது குறைக்கப்பட்டுள்ளது.

**“தமிழ்நாட்டிற்கு கடந்த 9 வருடத்தில் இரண்டு லட்சத்து 47 ஆயிரம் கோடி ரூபாயைப் பிரதமர் அளித்ததாக கூறும்பொழுது, அதே காலகட்டத்தில் உத்தரபிரதேசத்திற்கு 10 லட்சத்து 73 ஆயிரம் கோடியை அள்ளித் தந்ததை ஏன் மறைக்க வேண்டும்?” என்று கேள்வி எழுப்பி உள்ள தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள், “ஏதாவது ஒரு நெடுஞ்சாலைத் திட்டத்தைக் கொண்டு வந்தால்கூட ஆந்திரா, கர்நாடகா பயன்பெற்று அதில் மீதி தமிழ்நாடு பயன்பெறும் வகையில்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டதே தவிர, தமிழ்நாட்டிற்கு என்று பிரத்தியேகமாக எந்த நெடுஞ்சாலை சிறப்புத் திட்டத்தையும் அளிக்கவில்லை” என்றும் குற்றம் சாட்டி இருக்கிறார். இதற்கு உள்துறை அமைச்சரின் விளக்கம் என்ன?**

ஒன்றிய அரசும், மாநில அரசும் இணைந்து ஒரு திட்டத்தைச் செயல்படுத்தும் போது நடக்கும் சில காரியங்களையும் பிரதமர் முன்னிலையில் அப்போது முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

**“ஒன்றிய அரசு தனது நிதிப்பங்கை தொடக்கத்தில் அதிகமாக அளித்தாலும், காலப்போக்கில் தனது பங்கினைக் குறைத்து, மாநில அரசு செலவிட வேண்டிய நிதிப் பங்கை உயர்த்தும் நிலையைப் பார்க்கிறோம். ஒன்றிய - மாநில அரசுகளின் பங்களிப்போடு, பயனாளிகளின் பங்கையும் முன்னிறுத்தி, பல திட்டங்கள் ஒன்றிய அரசால் செயல்படுத்தப்படுகிறது. இதில் அந்தத் தொகையை பயனாளிகள் செலுத்த முடியாதபோது, மக்களுடன் நேரடித் தொடர்பில் இருக்கிற மாநில அரசுகள்தான் பயனாளிகளின் பங்களிப்பையும், சேர்த்து செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. இதனால் மாநில அரசின் நிதிச் சுமை அதிகரிக்கிறது”** என்று சுட்டிக் காட்டினார் முதலமைச்சர் அவர்கள். அதாவது பல்லாயிரம் கோடி என்று நிதிநிலை அறிக்கையில் சொல்வது, திட்டம் நடைமுறைக்கு வரும் போது இறுதியாக பணத்தைக் குறைத்துவிடுவது. இது ஒருவகையான தந்திரம் ஆகும். இதனைத்தான் செய்து வருகிறார்கள் என்பதை உள்துறை அமைச்சரால் மறுக்க முடியுமா?

8.4.2023 அன்று பல்லாவரத்தில் நடந்த விழாவில் பிரதமர் முன்னிலையில் பேசும்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், **“சென்னையில் செயல்படுத்தப்பட்டு வரும் மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளுக்கான ஒன்றிய அரசின் பங்கினை வழங்குவதற்கான ஒப்புதல் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒன்றிய அரசில் நிலுவையில் உள்ளது”** என்றார்.

★ சென்னை மாநகரத்திற்குப் பேரிடர் மேலாண்மைக்காக நிதி ஆணையம் பரிந்துரைத்த 500 கோடி ரூபாய் நிதியை இரண்டு ஆண்டுகளாக கொடுக்காத ஆட்சி.

★ மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

★ தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத்திற்கான கோரிக்கையைக் கிடப்பில் கிடக்கிறது.

★ ஒவ்வொரு நிதி நிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டின் ரயில் திட்டங்களுக்கு நிதி ஒதுக்காமல் புறக்கணித்து வருகிறார்கள்.

★ கடந்த 5 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் ரயில் திட்டங்களுக்கு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி 18 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால் 2023-24 ஒரு நிதியாண்டில் மட்டும் உத்தர பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 17,500 கோடி ரூபாய்.

★ சென்னை - மதுரவாயல் உயர்மட்டச் சாலை, சென்னை - தாம்பரம் உயர்மட்டச் சாலை, கிழக்கு கடற்கரை சாலையை நான்கு வழிப்படுத்துதல்,

சென்னை - மதுரை தேசிய நெடுஞ்சாலையை ஆறு வழித்தடமாக மேம்படுத்துதல் - போன்ற பல்வேறு முக்கிய திட்டங்கள் ஆரம்ப கட்ட நிலையிலேயே உள்ளன. இதுதான் தமிழ்நாட்டின் உண்மையான நிலைமை. இதனை முதலில் வாங்கிப் பார்த்து விட்டு உள்துறை அமைச்சர் பேசுவதே சரியானதாக அமைய முடியும்.

‘அரசியல் எதிரிகளின் வரலாற்றைப் படியுங்கள்’ என்று சொந்தக் கட்சிக்காரர்களுக்கு அறிவுரை சொல்லிவிட்டுச் சென்றுள்ளார் உள்துறை அமைச்சர். படியுங்கள். அத்தோடு தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கை மனுக்களையும் படியுங்கள்!

## நீதிமன்றத்தில் நடந்தது என்ன?

# அமலாக்கத் துறை பொய்யான தகவல்களைக் கூறியுள்ளது!

## மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேட்டி!

சென்னை, ஜூன் 17-

“நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை பொய்யான தகவல்களை கூறியுள்ளது” என்று மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. கூறியுள்ளார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி வழக்கில் சென்னை உயர் நீதி மன்றத்திலும், முதன்மை அமர்வு நீதிமன்றத்திலும் ஆஜரான பிறகு நீதிமன்ற வளாகத்தில் திமுக மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. செய்தியாளர்களைச் சந்தித்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: “செந்தில் பாலாஜியை நள்ளிரவில் அமலாக்கத் துறை சட்டவிரோதமாக கைது செய்தது. அந்த கைது நடவடிக்கைகளில் இந்திய அரசியலமைப்பு சரத்துகளும், குற்றவியல் நடைமுறை சரத்துகளும் மீறப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்ற வழிகாட்டு நெறிமுறைகளை மீறி செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டிருக்கிறார்.

எனவே அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விடுதலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஆட்கொணர்வு மனுவை செந்தில் பாலாஜி மனைவி தாக்கல் செய்தார். இந்த வழக்கில் இருந்து ஒரு நீதிபதி விலகிவிட்டதால், இன்று நீதிபதிகள் நிஷா பானு, பரத சக்ரவர்த்தி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அமலாக்கத் துறை சார்பில் நீதிமன்ற காவலுக்கு செந்தில் பாலாஜி அனுப்பப்பட்டுவிட்டார். எனவே ஆட்கொணர்வு மனு நிலைக்கத்தக்கது அல்ல என்று வாதிட்டனர்.

ஆனால் 2022ல் உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்பில் கைது நடவடிக்கைகளிலும், நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தும் போதும் சட்டவிரோதம் இருந்தால் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்ய முடியும். அதை உயர் நீதிமன்றம் விசாரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. இதை நீதிமன்றத்தில் எடுத்துக் காட்டினோம்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் ஆட்கொணர்வு மனு மீதான அனைத்து பதில்களையும் அமலாக்கத் துறை வரும் 22ஆம் தேதி எடுத்து வைக்கலாம் என்று நீதிபதிகள் சொல்லியிருக்கிறார்கள். காவேரி மருத்துவமனையில் அனுமதித்து இதய அறுவை சிகிச்சை செய்ய உத்தரவிடுமாறு நாங்கள் கேட்டோம்.

இதற்கு அமலாக்கத் துறை கடுமையாக எதிர்த்தது. எய்ம்ஸில் இருந்து ஒரு சிறப்பு குழு அமைத்து செந்தில் பாலாஜியை பரிசோதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

இதை கேட்ட நீதிபதிகள் செந்தில் பாலாஜியை நீதிமன்ற காவலிலேயே காவேரி மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும். உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாலும் கூட, எய்ம்ஸ் மருத்து



வர்களோ அல்லது அமலாக்கத் துறை விரும்பும் மருத்துவர்களோ அங்கு அளிக்கப்படும் பரிசோதனை சரிதானா என உறுதி செய்து கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மருத்துவ சிகிச்சையை முறையாக நடக்கிறதா என சரிபார்த்துகொள்ளலாம்.

ஜாமீன் மனுவை பொறுத்தவரை, எய்ம்ஸ் மருத்துவ பரிசோதனை கேட்டு அமலாக்கத் துறை தாக்கல் செய்த மனுவில் உண்மைக்கு புறம்பான செய்திகளை அமலாக்கத் துறை துணை இயக்குநர் கூறியுள்ளார். ஒரு மனிதனின் நலனுக்கு எதிராக ஆவணங்களை உருவாக்கி, ஒரு பொது ஊழியர் தவறு செய்தார் என்றால் அது இந்திய தண்டனை சட்டப்படி தண்டிக்கத்தக்கது. எனவே செந்தில் பாலாஜி சார்பில் அமலாக்கத் துறை அதிகாரிகள் மீது குற்றவியல் நடைமுறை தொடங்க உரிய அனுமதி கேட்டோம். அதற்கான மனுவை தாக்கல் செய்யும் போது நீதிமன்றம் அதை அனுமதிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஓமந்தூராரில் உரிய சிகிச்சை கிடைக்கும் என சொல்லும் அமலாக்கத் துறை ஓமந்தூரார் மருத்துவ அறிக்கையை ஏற்க மறுக்கிறது. இதிலிருந்து அமலாக்கத் துறை எப்படி நடந்துகொள்கிறது என்று புரிந்துகொள்ளலாம். இஎஸ்ஐ மருத்துவர்களும் செந்தில் பாலாஜிக்கு இருக்கும் பாதிப்பை உறுதி செய்துள்ளனர்”.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. கூறினார்.

## தரதரவென்று இழுத்து தரையில் தள்ளி – அமைச்சர்

# செந்தில் பாலாஜி மீது அமலாக்க அதிகாரிகள் தாக்குதல்!

## மனித உரிமை ஆணையம் விசாரணை நடத்தும்! உறுப்பினர் கண்ணதாசன் பேட்டி!

சென்னை, ஜூன் 17 -

“தரதரவென்ற இழுத்து தரையில் தள்ளி அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை அதிகாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது குறித்து மனித உரிமை ஆணையம் விசாரிக்கும்” என்று மனித உரிமை ஆணைய உறுப்பினர் கண்ணதாசன் கூறினார்.

அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜி சென்னை ஓமாந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அமைச்சர் செந்தில்பாலாஜி அமலாக்கத் துறையினரால் கைது செய்யப்பட்டதில் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் முறையாகப் பின்பற்றப்படவில்லை.

அமலாக்கத் துறையின் இந்த நடவடிக்கை மனித உரிமை மீறல் என்று தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் மற்றும் திமுக அதன் கூட்டணி கட்சிகள் குற்றம் சாட்டியிருந்தன.

இந்நிலையில், மாநில மனித உரிமை ஆணைய உறுப்பினர் கண்ணதாசன் நேற்று முன்தினம் (ஜூன் 15) அமைச்சர் செந்தில் பாலாஜியை நேரடியாக மருத்துவமனைக்கு சென்று சந்தித்தார்.

பின்னர் செய்தியாளார்களை சந்தித்து கண்ணதாசன் கூறியதாவது

“செந்தில் பாலாஜி கைதின் போது மனித உரிமை மீறல்கள் செய்யப்பட்டதாக வந்த தகவலின் அடிப்படையில் அது மட்டும் அல்லாமல் மனித உரிமை ஆணையத்திற்கு வரப்பட்ட புகாரின் அடிப்படையில் அது குறித்து விசாரணை செய்வதற்காக மாநில மனித உரிமை ஆணையத்தின் சார்பில் சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ள செந்தில் பாலாஜியை சந்திக்க வந்தேன்.



அவர் சோர்வாக காணப்பட்டார். அதனால் சற்று காத்திருந்து அவரை சந்தித்தேன் . அவரை விசாரணை செய்த பொழுது, தான் கைது செய்யப்பட்ட போது கடுமையாக நடத்தப்பட்டதாகவும், தன்னை தரதரவென்று இழுத்து தரையில் போட்டதால் தலையில் காயம் ஏற்பட்டதாகவும் சொன்னார் செந்தில் பாலாஜி.

தனக்கு இருக்கக்கூடிய இதய நோய் பற்றியும், மூன்று அடைப்புகள் இதயத்தில் இருப்பதாகவும், நெஞ்சுவலி காரணமாக தன்னால் தொடர்ந்து அதிகம் பேச முடியவில்லை என்றும் கூறினார்.

### மனித உரிமைகள் ஆணையம் விசாரிக்கும்!

செந்தில் பாலாஜி தனக்கு தொந்தரவு கொடுத்த அதிகாரிகளின் பெயர்களையும் என்னிடம் கூறியுள்ளார். ஏற்கனவே புகார் பெறப்பட்டது, தற்போதும் புகார் வந்துள்ளது. அந்த புகாரின் அடிப்படையில் மாநில மனித உரிமைகள் ஆணையம் இன்று விசாரித்து முடிவு எடுக்கும்” என்று கண்ணதாசன் கூறினார்.

மேலும் மாநில மனித உரிமைகள் ஆணையம் புகாரின் அடிப்படையிலும் வரலாம், தானாகவும் முன் வந்து விசாரிக்கலாம். நேற்று வந்த புகாரின் அடிப்படையில் தான் தற்போது செந்தில் பாலாஜியை சந்திக்க வந்துள்ளோம் என்று கூறினார்.

அமலாக்கத்துறை கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை முறையாக கடைபிடிக்க வில்லை என்று நீதிமன்றத்தில் சொல்கிறார்கள் என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கண்ணதாசன், ”எங்களுடைய விசாரணை வேறு. நீதிமன்றத்தின் விசாரணை வேறு” என்று பதிலளித்தார்.

### கீழே தள்ளி துன்புறுத்தியுள்ளனர்!

உடலில் காயங்கள் இருப்பதாக சொல்கிறீர்களே, நீங்கள் பார்த்தீர்களா?’ என்ற கேள்விக்கு, “தான் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தும் , நெஞ்சுவலி என்று சொல்லியும் மருத்துமனைக்கு அழைத்து செல்லாமல் வாகனத்தில் ஏற்றி கீழே தள்ளி தன்னை துன்புறுத்தியதாக அவர் என்னிடம் கூறினார்.

உடலில் காயங்கள் இருக்கிறதா என்பதை மருத்துவர்தான் சொல்ல வேண்டும். அவர் சோர்வாக காணப்பட்டதால் காயத்தை நான் பார்க்க வில்லை” என்று கண்ணதாசன் தெரிவித்துள்ளார்.

## நியாயவிலைக் கடைகளில் விநியோகம் செய்யப்படும்

# அத்தியாவசியப் பண்டங்களை கள்ளச் சந்தையில் விற்றால் கடும் நடவடிக்கை!

## குற்றச் செயலில் ஈடுபடுவோர் குறித்து தகவல் தெரிவிக்குமாறு ஆணையர் வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 17-

தமிழ்நாடு அரசின் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

அனைவருக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு பொது விநியோகத்திட்டம் / சிறப்பு பொது விநியோகத்திட்டம் ஆகியவற்றின் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்து வருகிறது. அவ்வாறு, விநியோகம் செய்யப்படும் அத்தியாவசியப் பண்டங்களை சிலர் முறைகேடாக கள்ளச்சந்தையில் விற்று அதிக லாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றனர்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்கள் தொடர் ரோந்து பணி மேற்கொண்டு அத்தியாவசியப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கலில் ஈடுபடுவோர் / உடந்தையாக செயல்படுவோர் மீது, இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955 மற்றும் தொடர்புடைய கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் வழக்கு பதிவு செய்து உரிய மேல் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்பு சட்டம், 1980ன் படி அவ்வப்போது தடுப்பு காவலிலும் வைக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த 01.05.2023 முதல் 31.05.2023 வரையிலான ஒரு மாத காலத்தில் கள்ளச் சந்தையில் விற்பதற்காக கடத்த முயன்ற, ரூ18,41,994/ (ரூபாய் பதினெட்டு லட்சத்து நாற்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று நான்கு மட்டும்) மதிப்புள்ள 2447 குவிண்டால் பொது விநியோகத்திட்ட அரிசி, 269 எரிவாயு உருளைகள், 180 கிலோ கோதுமை, 1100 கிலோ துவரம்பருப்பு, மண்ணெண்ணெய் 450 லிட்டர் ஆகியவையும், மேற்கண்ட கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 150 வாகனங்களும் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளன.

குற்றச்செயலில் ஈடுபட்ட 561 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையா பண்டங்கள் சட்டம் 1980 ன்கீழ் 2 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்றியமையாப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் தொடர்பாக பொதுமக்கள் 1800 599 5950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. மாநிலத் தலைவர் அமலாக்கத் துறை இயக்குநரா?

அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை குறி வைக்கும் என்று கடந்த 2022 ஆகஸ்ட் மாதமே அண்ணாமலை பேட்டியில் கூறியிருந்தார். “அதிமுக ஆட்சிக் காலத்தில் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த போது, முறைகேடு செய்ததாக செந்தில் பாலாஜி மீது உள்ள வழக்கில் அமலாக்கத்துறையும் வழக்கு பதிவு செய்துள்ளது. இந்த வழக்கில் நடவடிக்கை எடுக்கப்படுமா?” என்று பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையிடம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கேள்வி எழுப்பப் பட்டது. இதற்குப் பதிலளித்த அண்ணாமலை, “வெயிட் பண்ணுங் கண்ணா.. அமலாக்கத்துறை கொஞ்சம் பிஸியா இருக்காங்க. முடிச்சிட்டு இங்கதான் வருவாங்க. விரைவில் அமலாக்கத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்வார்கள்” என்று கூறினார்.

அண்ணாமலையின் இந்தப் பேட்டிக்கு அமைச்சர் செந்தில் பாலாஜியும் அப்போதே பதிலளித்து இருந்தார். அதில், அண்ணாமலை எப்போது அமலாக்கத்துறை இயக்குநரானார்? அல்லது அவர் இணை இயக்குநரா? ஒன்றிய அரசில் அவர் என்ன நிதி அமைச்சராக இருக்கிறாரா? அரவக் குறிச்சியில் தோல்வி அடைந்து ஓடினாரே.. அவர் தானே? என்ன பொறுப்பில் இருக்கிறார் அவர்? அந்த பக்கமே அவரை பார்க்க முடிய வில்லையே? அமலாக்கத்துறை பற்றி அண்ணாமலை எப்படி பேச முடியும்? தன்னிச்சையாக செயல்படக் கூடிய அமலாக்கத்துறை பற்றி அண்ணாமலை எப்படி பேசலாம். இதன் மூலம் அமலாக்கத்துறையை ஒன்றிய அரசு தவறாக பயன்படுத்துவது வெட்ட வெளிச்சம் ஆகிறது. ஆவணங்கள் இருந்தால் அண்ணாமலை கொடுக்கட்டும், பதில் சொல்கிறேன். மின்துறை மீதான அண்ணாமலை குற்றச்சாட்டு ஏற்கக் கூடியதாக இல்லை. ஒன்றிய அரசு எவ்வளவு டாலருக்கு நிலக்கரி இறக்குமதி செய்ய கூறியுள்ளது என தெரிவிக்க வேண்டும். இதை பற்றித் தான் செய்தி போட வேண்டும். அமலாக்கத்துறை தனி அமைப்பு. ஆனால் பா.ஜ.க.வின் மாநில தலைவராக இருப்பவர், இன்னார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எப்படி சொல்ல முடியும்? ஒருவேளை அவர்கள் தான் அமலாக்கத்துறையை கட்டுப்படுத்துகிறார்களா? அமலாக்கத்துறையை ஒரு அரசியல் கட்சி எப்படி பயன்படுத்துகிறது என்பது அண்ணாமலை பேச்சில் தெரிகிறது” என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அண்ணாமலை கூறியபடி தற்போது செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை கைது செய்துள்ளது.

நன்றி : தீக்கதிர்
15-06-2023